### பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட

# அன்னூர் நோயாளிக்கு அதிநவீன முறையில் சிகிச்சை

## கே.எம்.சி.எச். ஆஸ்பத்திரியில் சாதனை

கோவை, அக். 29–

கோவை கே.எம்.சி.எச். ஆஸ்பத்திரியில் ஸ்ட்ரோக் எனப்படும் மூளை ரத்தக் குழாய் அடைப்புக்காக சிகிச்சை பெற வந்த நோயாளியை சோனா த்ரோம்போலிசிஸ் என்ற அதிநவீன சிகிச்சை முறையால் குணமாக்கியுள்ளது. தற்போது மருந்துகளால் மாரடைப்பு ரத்தகட்டி அடைப்புகளை கரைத்து விடுவது போல உடனடியாக மூளையடைப்பு ரத்தக்கட்டிகளையும் கரைத்து விடலாம். ரத்த ஓட்ட அடைப்பு தாக்கிய 6 மணி நேரத்திற்குள் கே.எம்.சி.எச். மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு ஸ்ட்ரோக் த்ரோம்போசிஸ் சிகிச்சை மூலம் குணமாக்க முடியும்.




சிகிச்சை பெற்ற அன்னூர் நோயாளியுடன், கே.எம். சி.எச். சேர்மன் டாக்டர் நல்லா ஜி.பழனிசாமி

டீஸ்யூ பிளாஸ்மினோஜான் ஆக்டிவேட்டர் எனும் மருந்து மூலம் ரத்தகட்டி கரைக்கப்படுகிறது. உலகம் முழுக்க இந்த சிகிச்சை முறை தான் கடைபிடிக்கப்படுகிறது. அன்னூரை சேர்ந்த பொன்னுசாமி, ஸ்ட்ரோக்கால் பாதிக்கப்பட்டதும் 1½ மணிநேரத்திற்குள் கே.எம். சி.எச். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்ந்தார். இடது பக்க கை, கால் இயக்க முடியில்லை.

சி.டி..ஸ்கேன் சோதனையில் மூளையின் வலது பகுதியில், பிரதான ரத்த குழாயில் அடைப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. டிரான்ஸ்கிரேனியல் டாப்ளர் பரிசோதனையில் அல்ட்ரா சவுண்டு அலைகள் மூலமும் ரத்த ஓட்ட தடை கண்டறியப்பட்டது. துல்லியமாக ரத்தக்கட்டியை அறிந்ததும் அல்ட்ரா சவுண்டு அலைகள் மூலமும் ரத்த ஓட்ட தடை கண்டறியப்பட்டது.

துல்லியமாக ரத்தகட்டியை அறிந்ததும் அல்ட்ரா சவுண்டு அலைகளுடன் டிஸ்யூ பிளாஸ் மினோஜன் ஆக்டிவேட்டர் மருந்தை செலுத்துவதுமான இந்த சிகிச்சை முறை சோனா த்ரோம்சிஸ் எனப்படுகின்றது. இதில் பயன்படுத்தப்படும் டி.சி.டி. எனும் டாப்ளர் துல்லியமான சிகிச்சைக்கு வழிவகுக்கிறது. 1 மணி நேரம் தொடர்ந்து அளித்த சிகிச்சையால் இந்த நோயாளி இடது பக்க கை,கால் அசைவுகளை தொடர முடிந்தது. உலகிலேயே மிகச் சில மையங்களில் தான் இந்த நவீன முறை சிகிச்சை அளிக்கப்படுகின்றது. கோவை கே.எம்.சி.எச். மருத்துவமனையின் நரம்பியல் சிகிச்சை துறையின் டாக்டர்.கே. விஜயன் தலைமையில் இந்த சாதனை சிகிச்சை வெற்றிகரமாக நடந்ததன் மூலம் கோவையில் கே.எம்.சி.எச். ஆஸ்பத்திரி முதன்முதலாக சாதனை புரிந்துள்ளது.